ஒன்றிய அரசின் தொகுதி மறு வரையறை என்பது

# தமிழ்நாட்டை வஞ்சிக்கின்ற செயல்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. பேட்டி!



செஞ்சி, ஏப். 9 -

தமிழ்நாட்டில் தொகுதி மறு வரையறை என்பதை வன்மையாக கண்டிக்கின்றோம். எனவே தான் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்கிற லட்சியத்துடன் தன்னுடைய பயணத்தை தொடர்ந்து மேற்கொள்கிறார் எனவே இந்த நாட்டு மக்கள் இந்த செய்திகளெல்லாம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதால் செய்தியாளர்கள் மத்தியிலே இங்கு குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன் என விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சிக்கு ஒன்றிய அரசாங்கம் பெருமைப்பட வேண்டும் அதை சுட்டிக்காட்டி மற்ற மாநிலங்கள் அதைப்போல செயல்படுத்த வேண்டும் என்று சொல்லுவதுதான் பெருந்தன்மையாக இருக்கும் ஆனால் தமிழகம் பொருளாதாரத்தில் கல்வியில் சுகாதாரத்தில் பல்வேறு தொழில் சாலைகளை உருவாக்குவதில் தொழில் மையங்களில் இன்றைக்கு முன்னிலை வகிப்பதை ஏற்றுக்கொள்ளாமல் ஜீரணித்து கொள்ளாமல் பொறாமையோடு

பழிவாங்குகிற அந்த செயலில் இன்றைக்கு ஒன்றிய அரசாங்கம் ஈடுபடுவது ஏதோ தமிழ்நாட்டை ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் அந்த பாதிப்பை ஏற்படுத்துகின்ற நிலைதான் பிரதமர் மோடி அவர்களும் அமைச்சர்களும் செயல்படுகிறார்கள் என்பது நாடறிந்திருக்கிறது.

தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு உறுதுணையாக ஒன்றிய அரசாங்கம் இருக்க வேண்டும் கல்வி வளர்ச்சிக்காக கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்காமல் இன்றைக்கு அதை காலம் கடந்து தமிழகத்தில் கல்வி வளர்ச்சி குறைக்க அவர்கள் மறைமுகமாக திட்டம் தீட்டுகிறார்கள் என்பது நாம் அனைவரும் அறிவோம் எனவே தான் அன்றைக்கு நூறாண்டு காலமாக ஜஸ்டிஸ் கட்சியை நீதி கட்சி பெரியார் அண்ணா கலைஞர் எல்லாம் இதற்கு முத்தா ய்ப்பாக தான் தமிழகத்தை நம்முடைய கல்வியில் உயர்த்த வேண்டும் என்பதற்காக காமராஜர் கண்ட கனவை இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்செயல் படுத்தி வருகிறார்.

உலகமே வியந்து பார்க்கின்ற அளவுக்கு காலை சிற்றுண்டி திட்டத்தை கொண்டு வந்து பள்ளி மாணவர்களுடைய எண்ணிக்கை உயர்த்தியிருக்கிறார் பெண்கள் படித்தால் தான் ஒரு நாட்டினுடைய முன்னேற்றம் பெண்கள் மத்தியிலே பொருளாதார இருந்தால் தான் அந்த நாட்டினுடைய வளர்ச்சி.

ஒரே ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன் என்றைக்கு இந்தியாவில் சராசரியாக 8 லட்சம் கோடிக்கு தங்கம் விற்பனையாகிறது அதில் 2 லட்சம் கோடி தங்கம் விற்பனை தமிழகத்தில் அது செயல்படுத்தி இருக்கிறது இதுவே ஒன்றே ஒன்று பார்க்கின்ற நேரத்தில் தமிழகம் தான் வறுமை கோட்டுக்கு உள்ளவர்கள் எண்ணிக்கை மிக மிக குறைவாகும் இந்தியா இன்றைக்கு 20 கோடி பேரை வருமைகோட்டுக்கு கீழே உள்ள பட்டியலை வைத்திருக்கிற காலகட்டத்தில் தமிழகத்தில் தான் இன்றைக்கு பெண்கள் மத்தியிலே பொருளாதாரம் இருகர காரணத்தினால் தான் அந்த தங்க வியாபாரம் கூட தமிழகத்தில் நான்கில் ஒரு பங்கு செயல்படுகிறது மற்ற மாநிலங்களில் ஏன் குஜராத்தில் மூன்று முறை முதல மைச்சராக இருந்த நரேந்திர மோடி பிரதமர் அவர்களுடைய மாநிலத்தில் தங்க வியாபாரம் பெரிய பெரிய வியாபாரிகள் இருக்கிறார்கள் தவிர சாதாரண கூலி தொழிலாளர்கள் அந்த தங்கத்தை வாங்குகிற நிலை இல்லாத நிலைதான் பொருளாதார நிலை அங்கே இருக்கிறது எனவே பொருளாதாரத்திலும் கல்விலும் சுகாதாரத்திலும் முதலிடம் இருக்கின்ற தமிழகத்தை ஒன்றிய சர்க்கார் வஞ்சிக்கின்றது அதை தான் சுட்டிக்காட்டி நம்மளுடைய தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற அந்த குரலுக்கு ஒட்டுமொத்த தமிழர்களும் ஆதரவளித்து இருக்கிறார்கள் .

அது மட்டுமல்ல இந்தியாவிலுள்ள ஏழுக்கும் மேற்பட்ட மாநில முதலமைச்சர்கள் எல்லாம் நேரடியாக வந்து ஆதரவளித்திருக்கிறார்கள் மற்றவர்கள் எல்லாம் தனக்கு அந்த ஆதரவை தெரிவித்து இருக்கிறார்கள் நாடாளுமன்றத்தில் நடைபெறுகின்ற நிகழ்வு எல்லாம் பார்க்கின்ற நேரத்தில் எப்பேர்பட்ட சூழ்நிலைகள் காரணமாக திட்டங்களை அவர்கள் நிறை வேற்றுகிறார்கள் எவ்வளவு சங்கடத்தை உருவாக்குகிறார்கள் திணிக்கிறார்கள் என்பது தெரியும் .

இந்திய அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமாக இன்றைக்கு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் செயல்படுகிறார்கள் என்பது தான் இந்த செய்தியின் மூலமாக நாம் கண்டிக்கின்றோம். அவர்இது போன்ற அறிவிப்புகளை திரும்ப பெற வேண்டும் இந்த நிலையெல்லாம் தமிழகத்தை வஞ்சிக்கின்ற செயலில் அவர் பின்வாங்க வேண்டும் என்பதுதான் அனைவருடைய விருப்பம்.

மக்கள் தொகை அடிப்படையில் மட்டும் தொகுதிகள் சீரமைப்பதை தான் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் பொருளாதாரத்தையும் பார்க்க வேண்டும் வளர்ச்சியும் பார்க்க வேண்டும் ஏன் 1971ல் ஒரு நாடாளுமன்ற தொகுதிக்கு 10 லட்சம் வாக்காளர்கள் இருந்தார்கள் இன்றைக்கு 15 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்காளர்கள் இருக்கிறார்கள் அதை எல்லாம் பார்க்கின்ற நேரத்தில் அதை ஒப்பிட்டு பார்க்கின்ற நேரத்தில் தமிழகத்தினுடைய வளர்ச்சியும் வாக்காளர்களுடைய எண்ணிக்கை கூடுதலாகி அந்த நாடாளுமன்ற தொகுதியில் உள்ள எண்ணிக்கையும் பார்த்தால் இதுதான் சரியான கணக்காக இருக்கும் இதைதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதையும் கடந்து பாராளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கைகள் கூடுதலாக வேண்டும் என்று ஒன்றிய அரசாங்கம் நினைத்தால் அதை முறைப்படுத்தி எந்தெந்த மாநிலத்துக்கு எத்தனை விகி தாச்சாரத்தோடு அந்த எண்ணிக்கை கூடுத லாக்கும் எண்ணம் இருக்கிறதோ அதை சட்ட நுணுக்கத் தோடு அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் விகிதாச்சார அடிப்படையிலே எண்ணிக்கை களை கூட்ட வேண்டும் உதாரணத்திற்கு 39 தொகுதிகள் தமிழ்நாட்டில் இருக்கிறது என்று சொன்னால் விகிதாச்சார பிரகாரம் மூன்று தொகுதிகள் ஏழு தொகுதிகள் ஆறு தொகுதிகள் கூடுதலகா வந்தால் அதைப்போல கூடுதலாக்க வேண்டுமே தவிர இருப்பதை குறைப்பதற்காக அது ஒரு மறைமுகமான வேலைகளை செய்கின்ற ஒன்றிய பா.ஜ.க. மோடி அரசை முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வன்மையாக கண்டித்து வருவதாகவும் ஒன்றிய அரசின் தொகுதி மறு வரையறை என்பது தமிழ்நாட்டை வஞ்சிக்கின்ற செயல் என்றும் மக்கள்தொகை அடிப்படையில் மறு வரையறை என்பதை வன்மையாக கண்டிப்பதாக விழுப்புரம் வடக்கு மாவட்டம் பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.




கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கு இணங்க, கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின்படியும், கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளர்கள் இன்பா ஏ.என்.ரகு, ஜி.பி.ராஜா ஆகியோர் வழிகாட்டுதலின்படி மதுரை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.இளங்கோ ஏற்பாட்டில் ஒத்தக்கடையில் நடைபெற்ற நீர் மோர் பந்தல் திறப்பு விழாவினை ஒன்றிய செயலாளர் அ.பா.ரகுபதி பங்கேற்று துவக்கி வைத்தார். உடன் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஐயப்பன், பரவை அன்புச்செல்வன், வெற்றிச்செல்வன், குமரேசன், மருதுராஜா' வன்னிமுத்து பாண்டி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சீமான், அண்ணாமலை நெசவாளர் அணி வினோத் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், இளைஞர் அணியினர் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் புலவர் கி.தியாகராசன்

### ஏப்ரல் 9 (2000)



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலம் தொட்டு, பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களுடன் திராவிடர் இயக்கத்தில் இணைந்து பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் தன்மானத் தொண்டராய் – பேரறிஞர் அண்ணாவின் பேரன்பையும் – தலைவர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் அன்பையும் பெற்றவர்.

தந்தை பெரியாரின் இல்லத்தில் தங்கி, 'குடிஅரசு' நாளிதழில் பணியாற்றியதோடு, கழகத்தின் "நம் நாடு" ஏட்டின் துணை ஆசிரியராகவும் பணியாற்றி இயக்கத் தொண்டாற்றியவர்.

இராயபுரம் பகுதியில் கழகம் வளர்ந்திட இயக்கத் தோழர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

பி.கே.மூக்கையா தேவருக்கு நினைவு மணி மண்டபம்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் பி.என்.அம்மாவாசி அறிக்கை!



சென்னை, ஏப். 9 -

அகில இந்திய பார்வர்டு பிளாக் நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாவாசி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தேவர் தந்த திருமகன். பி.கே.மூக்கையாத்தேவர் அவர்களுக்கு மணி மண்டபம், தமிழ்நாடு அரசு அறிவிப்புக்கு வல்லரசு பார்வர்டு பிளாக் நிறுவனத் தலைவர் பி.என். அம்மா வாசித் ஆகிய நான் நமது தமிழக முதல்வர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டை தெரிவிக்கிறேன்.

03.04.2025ந் தேதி அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 04.04.2025ந் தேதி அன்று பிறந்த நாள் காணும் நூற்றாண்டு விழா நாயகர் பி.கே.மூக்கையாத் தேவர் அவர்களுக்கு அரசு சார்பில் உசிலம்பட்டியில் மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கு மிகுந்த மகிழ்ச்சியும், நன்றியும், பாராட்டையும் வல்லரசு பார்வர்டு பிளாக் கட்சி தெரிவிக்கிறது. மேலும் கம்யூனிசம் தோற்றுவித்த கார்ஸ் மார்க்ஸ் அவர்களுக்கு சென்னையில் சிலை வைக்கப்படும் என்ற அரசு அறிவிப்புக்கு நன்றி.

2000ம் ஆண்டு தலைவர் வல்லரசு அவர்கள் மறைந்த அன்று சபாநாயகராக இருந்து பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களின் சார்பாக வந்த போது மறைந்த பி.என்.வல்லரசு அவர்களுக்கு மணி மண்டபம் கட்டித்தரப்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதாக பி.டி.ஆர் அவர்கள் சொன்னார்கள். அதை நிறைவேற்ற வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## வலைதளங்களில் வைரலாக வலம் வரும் செய்தி!






மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பாக மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் பொறியாளர் அணி மாநில துணை அமைப்பாளர் கலை கார்த்திகேயன் முன்னிலையில் திருமங்கலம் கழக அலுவலகத்தில் நேர்காணல் நடைபெற்றது. உடன் மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் சுரேஷ், ராஜபிரபாகரன், ராஜபாண்டி, பிரவீன் குமார், சிவக்குமார், கழக நிர்வாகிகள் நாகராஜன், எம்.முத்துராமலிங்கம், லதா அதியமான், ஸ்ரீதர், தனபாண்டியன், ராமமூர்த்தி, மதன்குமார், தங்கபாண்டியன், விமல், கிருஷ்ண பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள், நேர்காணலில் பங்கேற்ற பொறியாளர் அணியினர் உள்ளனர்




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 12.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | தியாகராய நகர் | ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர் |
| 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | மயிலாப்பூர் | மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர் |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-04-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி